பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பு - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நம்பிக்கை பொறுப்பின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கைப்பொறுப்பு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நம்பிக்கைப்பொறுப்பை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நம்பிக்கைப்பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப்பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நம்பிக்கைப்பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நம்பிக்கைப்பொறுப்பின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நம்பிக்கைப்பொறுப்பின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நம்பிக்கைப்பொறுப்பின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்.

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி இலக்கம் 80 மற்றும் 82 இற்கு முரணாக எதிர்வரும் 12 மாத காலத்தில் செலுத்த வேண்டிய ரூபா 14,285,712 கடன் மீதி நடைமுறையல்லாப் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இலங்கை வங்கிக் கடன் மீதிக்கு உரிய 12 மாதங்களுக்குள் செலுத்த வேண்டிய கடன் மீதி நடைமுறைப் பொறுப்புக்களின் கீழும், 12 மாதங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழும் காண்பிப்பதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம்.	நியமத்தின் பிரகாரம் நிதிப் பொறுப்புக்கள் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டு அறிக்கையிடப்படல் வேண்டும்.
(ஆ)	இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி இலக்கம் 69 இற்கு முரணாக நம்பிக்கைப் பொறுப்பினால் ஒவ்வொரு வருடமும் சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு சொத்துக்களின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படுகின்றமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,245,967 ஆன அலுவலக உபகரணங்கள் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கின்றோம். நிறுவனத்தின் பெறுமானத் தேய்வுக் கொள்கை சனவரி 01 ஆந் திகதியில் காணப்படுகின்ற சொத்துக்களின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நேர்கோட்டு முறையின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு செய்வதாகும். எதிர்காலத்தில் நடைபெறுகின்ற 66 ஆவது முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்புக் கூட்டத்தில் விடயங்கள் சமர்ப்பித்து இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் பெறுமானத் தேய்வு செய்யக் கூடிய பிரகாரம் பெறுமானத் தேய்வு கொள்கையை மாற்றுவதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம்.	நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

(இ)	மீளாய்வாண்டு வரையில் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 1,487,165 ஆன தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் அலுவலக உபகரணங்களும் தொடர்ந்தும் பயன்படுத்தப் படுகின்ற போதிலும் இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி இலக்கம் 92 (ஆ) இன் பிரகாரம் அந்த சொத்துக்களின் மொத்த இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்கின்றோம். ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்களின் மொத்த இழிவுப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்காக முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பிரகாரம் அந்த சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம்.	நியமத்தின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட எனினும் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்களின் இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 1,051,400 ஆன செயலிழந்த சீசீரீவீ கெமராவை அகற்றுவதற்காக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கிரயம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் உள்ளடக்கப்பட்டமையால் அவற்றின் இழிவுப் பெறுமதி சரியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். செயலிழந்து அகற்றுவதற்காக களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ள ரூபா 1,051,400 ஆன சீசீரீவீ கெமராவிற்கு உரிய இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி இலக்கம் 92 (இ) இன் பிரகாரம் எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம்.	அகற்றுவதற்காக வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,436,130 பெறுமதியான வாகன தரிப்பிட மென்பொருள் முறைமை 2022 முதல் 2024 ஆம் ஆண்டு வரை பெறுமானத் தேய்வு கணப்பிடப்படாது இருந்தமையால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 287,226 அதிகரித்தும் பெறுமானத் தேய்வு ஒதுக்கம்	ஏற்றுக் கொள்கின்றோம். இது தொடர்பான சீராக்கங்கள் யூன் மாதம் 30 ஆந் திகதி QB முறைமையில் மேற்கொண்டு அந்த மென்பொருள் பிரதி ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக பெறுமானத் தேய்வு கணிப்பிட்டு இலாபத்தில் சீராக்குதல் வேண்டும்.

	மற்றும் திரண்ட நட்டம் ரூபா 861,678 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(இ)	2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் ஸ்தாபிக்கப்பட்ட ரூபா 3,006,422 பெறுமதியான மூலதன வடிவிலான 06 விடயங்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினமாக 2023 ஆம் ஆண்டில் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 3,006,422 குறைத்தும் திரண்ட நட்டம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம். உறுதிச் சீட்டு இலக்கம் 4509 இல் செலுத்தப்பட்டுள்ள ரூபா 2,894,922 தொகை நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படும்என குறிப்பிடுகின்றோம்.ரூபா 52,500 ஆன மின்சார விசிறி மற்றும் ரூபா 59,000 பெறுமதியான கணனி மொனிட்டர் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். மேலும் இதனைச் சரி செய்தல் தற்போது QB முறைமையின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் மென்பொருள் பிரதி ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதன செலவினங்கள் மற்றும் வருமான செலவினங்கள் தெளிவாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட ரூபா 3,576,089 பெறுமதியான மூலதன வடிவிலான 08 விடயங்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினமாக கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 3,520,477 குறைத்தும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 3,576,089 குறைத்தும் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 55,612 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கின்றோம். ரூபா 6,676,252 தொகை முன்னைய ஆண்டின் கடன் கொடுத்தோரின் கொடுப்பனவாக சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூபா 6,676,252 இரத்துச் செய்யப்பட்ட உறுதிச்சீட்டாகும். அதற்குரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. ரூபா 1,908,874 மற்றும் ரூபா 1,669,465 தொகை நிலையான சொத்தின் கீழ் நீர்க் குழாய் முறைமையாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த சரிசெய்தல்கள் தற்போது QB முறைமையின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் மென் பொருள் பிரதி ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதன செலவினங்கள் மற்றும் வருமான செலவினங்களை தெளிவாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.

(உ)	முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினால் பேணிச் செல்லப்படுகின்ற கூட்டுமொத்தமாக ரூபா 237,737,841 ஆன 03 நிலையான வைப்புக்களுக்காக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட்டி ரூபா 13,742,621 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 13,421,991 ஆக இனங்காணப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 320,630 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். அடுத்துவரும் ஆண்டின் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது சரி செய்யப்படும் என குறிப்பிடுகின்றோம்.	சரியாக வட்டி வருமானம் இனங்கண்டு சீராக்கப்படல் வேண்டும்.
(ஊ)	வாகன தரிப்பிடத்திற்காக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 17,402,781 மீதி 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டதுடன் அறவிடும் இயலுமையைக் கவனத்தில் கொண்டு அதற்காக அறவிட முடியாக் கடன் ஒதுக்கமும் மேற்கொள்ளப்படவில்லை.	இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 17,402,281 மீதியைத் தீர்க்குமாறு அவ்வப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதில் காணப்படுகின்ற சிக்கலான நிதி நிலமையின் காரணமாக இந்த மீதியை அறவிடுவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது.	கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் இருந்து அறவிட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அதுவரை அதற்காக அறவிட முடியாக் கடன் ஒதுக்குதல் வேண்டும்.
(எ)	கடை வாடகை கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 80,248,447 செயலிழந்த மீதி பல வருட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டதுடன் அதனை அறவிடுதலும் நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்றது. எனினும் அதற்காக அறவிட முடியாக் கடன் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	ஏற்றுக் கொள்கின்றோம். முகாமைத்து நம்பிக்கைப் பொறுப்புக் கூட்டத்தின் போது அங்கீகாரத்தைப் பெற்று அறவிட முடியாக் கடனுக்கு ஒதுக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செயலிழந்த கடன்பட்டோரிற்காக அறவிட முடியாக் கடன் ஒதுக்கங்களும் மிகுதி கடன்பட்டோர்களுக்கு பொது விகிதத்தின் கீழ் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கமும் செய்தல் வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டின் தனியார் கம்பனியில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,018,875 ஆன வாகனத் தரிப்பிடக் கட்டணம், வருமானமாக	ஏற்றுக்கொள்கின்றோம். வாகனத் தரிப்பிட வருமானம் கிடைக்க வேண்டிய வருமானமாக சீராக்குவதற்கு நடவடிக்கை	காலப் பகுதிக்குரிய பெற வேண்டிய வருமானங்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில்

	இனங்காணாமையினால் ஆண்டின் இலாபம் மற்றும் பெற வேண்டிய வாகன தரிப்பிட வருமானம் ரூபா 2,018,875 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எடுக்கப்படும்.	சீராக்குதல் வேண்டும்.
(ஐ)	மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் 22 சந்தை உரிமையாளர்களினால் நேரடியாக வங்கிக்கு வைப்புச் செய்யப்பட்ட ரூபா 987,060 ஆன வாடகை வருமானம், வாடகை வருமானமாக குறிப்பிடப்படாமல் வங்கி இணக்கக் கூற்றில் இனங்காணப்படாத பெறுவனவாகக் காட்டப்பட்டமையால் இலாபம் மற்றும் வாடகை வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். முன்னைய ஆண்டின் விடயங்களை சீராக்குவதன் கீழ் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நேரடியாக வங்கிக்கான அனுப்புதல்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஒ)	நம்பிக்கைப் பொறுப்பின் கூரையை சூரிய சத்தி முறைமை ஒன்றுக்காக வாடகைக்கு வழங்குவதற்காக ரூபா 305,064 தொகை மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய வருமானமாக இனங்காணாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் மற்றும் பெற வேண்டிய சூரியகல வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக சட்ட உத்தியோகத்தர்களின் ஆலோசனையைப் பெற்று உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப் பகுதிக்குரிய பெற வேண்டிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் மீளாய்வாண்டின் ரூபா 107,264,505 ஆன கடை வாடகை கடன்பட்டோரின் மீதியில் ரூபா 80,248,446 அதாவது 75 சதவீத அளவு 03 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதியாக இருந்ததுடன்	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு தற்போது குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பரிந்துரையைப் பெற்று நிலுவை பணத்தை அறவிடுவதற்கு விரைவாக மேற்கொள்ளப்படும். இதில்	காலாவதியான மீதிகளை அறவிடுவதற்கு முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இந்த காலாவதியான கடன் மீதியை அறவிடுவதற்கு முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினால் போதியளவான நம்பிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆரம்பப் படிமுறையாக கடை வாடகை செலுத்துமாறு பதிவுத் தபாலில் விரைவாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்காக (CECB) செலுத்த வேண்டிய ரூபா 6,964,161 மற்றும் தனியார் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 7,538,491 கூட்டுத்தொகையானது 2021 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன் அந்தப் பெறுமதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் உப அலுவலகத்தின் மூலம் (CECB) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக நிலுவை ரூபா 6,964,161 தொகையை செலுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டதுடன் அந்த ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கும் அந்த தொகையை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்து தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 876(3)	நியதிச் சட்டம் அல்லாத நிதியம் உடனடியாக அமுல்படும் வகையில் கலைக்கப்பட்டு அவற்றின் காசு மீதி ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்க வேண்டியிருந்ததுடன் நிதியம் மேலும் நடாத்திச் செல்வதற்கு நியாயமான காரணங்கள் உள்ளதாயின் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் அந்த நிதியம் சட்டமாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். நியதிச் சட்ட நிறுவனமாக நடாத்திச் செல்வதற்காக தற்போது வரைவு ஒன்று தயாரித்து சட்டமா அதிபருக்கு அனுப்புவதற்கும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 66 ஆவது முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.	பாராளுமன்ற சட்டத்தின் மூலம் அந்த நிதியம் சட்டமாக்கப்படல் வேண்டும்.

(ஆ)	2010 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய நம்பிக்கை பொறுப்பு விதி			
(i)	பிரிவு இலக்கம் 6 (அ) 1	நம்பிக்கைப் பொறுப்பின் சகல மிகை நிதியும் திறைசேரி உண்டியல்கள், அரசாங்கத்தின் சேமிப்புப் பத்திரங்கள் தவிர ஏனைய தோவது முறையில் முதலீடு செய்வதற்கு திறைசேரியின் எழுத்துமூல முன் இணக்கப்பாடு பெற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான இணக்கப்பாடு இன்றி நம்பிக்கைப் பொறுப்பு சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் கூட்டுமொத்தமாக ரூபா 248,640,220 இரண்டு அரச வங்கிகளில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். இந்த நிலையான வைப்பு அரசாங்க வங்கிகளில் மாத்திரம் பேணிச் செல்லப்படுவதுடன் இதன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற புதிய நிலையான வைப்புக்களுக்காக திறைசேரியன் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	நம்பிக்கை பொறுப்புறுதியின் 6 (அ) 1 பந்தியின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு முன்னர் திறைசேரியின் எழுத்து மூல இணக்கப்பாடு பெறப்படல் வேண்டும்.
(ii)	பிரிவு இலக்கம் 7(இ)	கட்டிட தொகுதியின் மீன்கள் கையாளல் சுகாதாரமான ரீதியில் மேற்கொள்வதற்கும் வியாபாரம் செய்யப்படுகின்ற மீன்கள் உணவு சுகாதாரம் மற்றும் தரத்தன்மையுடன் குறிப்பிட்ட நியமத்தில் பேணிச் செல்லப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென காண்பிக்கப்பட்ட போதும் அதற்கு தேவையான வழிகாட்டி அல்லது சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படாது இருந்தமையால் அந்த நடவடிக்கைகளை பரீட்சிப்பதற்கான திட்ட முறைமை ஒன்றை இனங்காண முடியாது இருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம். அளவு கோல்கள் மற்றும் வழிகாட்டிகள் சுகாதார பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து தற்போது பெறப்பட்டதுடன் எதிர்வரும் முகாமைத்துவ கூட்டத்தின் போது அங்கீகாரத்தைப் பெற்று இநந்த வழிகாட்டியை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நம்பிக்கை பொறுப்புறுதியின் 07 (இ) பந்தியின் பிரகாரம் மீன் உணவு சுகாதாரம் மற்றும் தர தன்மையுடன் குறித்துரைத்த தரத்தில் பேணிச் செல்வதற்காக சட்டங்கள் மற்றும் வழிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.
(iii)	பிரிவு இலக்கம் 7 (உ)	நம்பிக்கைப் பொறுப்புக்குரிய 154 மொத்த விற்பனைக் கடைகள் மற்றும் 128 சில்லறை விற்பனைக் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக நம்பிக்கைப் பொறுப்பினால் அங்கீகரிக்கப்பட்ட எழுத்து மூல அளவு கோல்கள் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அளவு கோள்களை தயாரிக்காமல்	புதிதாக வழங்கப்படுகின்ற கடைகளுக்காக அளவு கோல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பழைய முறைமையின் கீழ் வாடகைக்கு வழங்குப்பட்டுள்ள கடைகள் வெற்றிடமான சந்தரப்பத்தில் மீண்டும்	நம்பிக்கை பொறுப்புறுதியின் 07 (உ) பந்தியின் பிரகாரம் கடைகளை வாடகைக்கு வழங்கும் போது எழுத்து மூல அளவுகோள்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

		2011 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.	வாடகைக்கு வழங்குவதாயின் புதிய அளவுகளின் கீழ் வழங்கப்படும்.	
(iv)	பிரிவு இலக்கம் 7 (கா)	நம்பிக்கைப் பொறுப்பின் ஆதனங்களைப் பாதுகாப்பதற்காக வழக்கு தொடர்வதற்கோ அல்லது வழக்குகளின் போது பதிலினை வாய் மூலம் சமர்ப்பிப்பதற்கோ முடியுமாக இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் 2011 ஆம் ஆண்டு முதல் ரூபா 107,264,505 ஆன வாடகைக்கு வழங்கப்பட்ட 282 கடைகளுக்காக நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக வழக்குத் தொடர்வதற்கு போதியளவான சான்றுகள் நிறுவனத்தில் வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்க முடியாது இருந்ததுடன் அதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாகவும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு தற்போது குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பரிந்துரையைப் பெற்று நிலுவைப் பணத்தை அறவிடுதலை விரைவாக மேற்கொள்ளப்படும்.. இதில் ஆரம்பப் படிமுறையாக கடை வாடகையை செலுத்துமாறு பதிவுத் தபால் மூலம் விரைவாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நம்பிக்கை பொறுப்புறுதியின் 7 (கா) பந்தியின் பிரகாரம் வழக்கு தொடர்வதற்கு போதியளவான சான்றுகள் நிறுவத்தில் பேணிச் செல்வதற்கும் , நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(v)	பிரிவு 8(அ) இலக்கம்	நம்பிக்கைப் பொறுப்பின் செயலாற்றல் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக தேவையான எந்த ஒரு சந்தர்ப்பங்களிலும் நம்பிக்கைப் பொறுப்பின் கூட்டங்கள் நடாத்த முடியும். அதன் பிரகாரம் 02 மாதங்களுக்கு ஒரு தடவையாவது அந்த கூட்டங்கள் நடாத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட கூட்டத் தடவைகள் 03 மாத்திரம் ஆகும். அதன் பிரகரம் ஆகக் குறைந்த கூட்ட அளவேனும் நடாத்தப்பட வில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். கடந்த ஆண்டின் அமைச்சின் செயலாளர் அவ்வப்போது மாற்றமடைந்தமையினால் ஆகக் குறைந்த கூட்டங்களின் எண்ணிக்கை நடாததுதவற்கு முடியாதிருந்தது. எனினும் ஆகக் குறைந்த கூட்டங்கள் எண்ணிக்கையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நம்பிக்கை பொறுப்புறுதியின் 8(அ) பந்தியின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(vi)	பிரிவு 8(ஊ) இலக்கம்	சம்பளம், படிகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொகைகளாக எந்த ஒரு ஊதியத்தையும் பெற்றுக் கொள்வதற்கு நம்பிக்கை பொறுப்பாளருக்கு	நம்பிக்கைப் பொறுப்பு சபையின் தலைவரை உள்ளடக்கிய அங்கத்தவர்களுக்கு நம்பிக்கை பொறுப்பு சபை கூடுவதற்கு	நம்பிக்கை பொறுப்புறுதியின் 8 (ஊ) பந்தியின் பிரகாரம் நெம்பிக்கை பொறுப்பாளர்களுக்கு ஊதியம் செலுத்த

	உரித்தில்லாதிருந்ததுடன் ஏதாவது ஏற்பட்ட செலவினம் மாத்திரம் மீளளிப்புச் செய்ய முடியும். எனினும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் நம்பிக்கை பொறுப்பாளர் சபைக்காக முதலாவதாக பெயர் குறிப்பிடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு சபை தலைவரை உள்ளடக்கி 14 அங்கத்தவர்களுக்கு மீளாய்வாண்டிற்காக சம்பளம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு கூட்டங்களுக்கு சமூகமளித்தமைக்காக படியாக ரூபா 385,000 கூட்டுமொத்தமாக செலுத்தப்பட்டிருந்தது.	கூட்டத்திற்கு சமூகமளிப்பதற்கு ஏற்படுகின்ற எரிபொருள் செலவினத்தை உள்ளடக்கிய செலவினங்களை தீர்த்து வைப்பதற்கு போதியளவான தொகை ஒன்று மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளது. சம்பளம் செலுத்தப்பட வில்லை.	முடியாதிருந்ததுடன் ஏற்பட்ட ஏதாவது செலவினத்தை மாத்திரம் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,599,659 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 8,063,877 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 19,663,536 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு வருமானம் ரூபா 26,206,530 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நம்பிக்கை பொறுப்பின் பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டு 07 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் நம்பிக்கைப் பொறுப்பின் முகாமையாளர், கணக்காளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் போன்ற பதவிகளுக்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பதற்கான நடைமுறை அங்கீகரித்து ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்படவில்லை.	சிக்கலான நிதி நிலைமையின் அடிப்படையில் செலவின முகாமைத்துவத்தை செய்யும் நோக்கில் இந்த பதவிகள் அமைச்சு உத்தியோகத்தர்களின் மூலம் மேவுகை செய்யப்பட்டிருந்தது. அமைச்சு உத்தியோகத்தர்களின் மூலம் இந்தப் பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுகின்றமையால் நிதி முகாமைத்துவம் சிறந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு முடியுமாக இருந்தது. எதிர் காலத்தில் இந்த பதவிகளுக்காக நிரந்த உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	ஆட்சேர்த்தல் நடைமுறையை அங்கீகரித்து ஆட்சேர்த்தலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினால் மொத்த விற்பனைக் கடைகளுக்கான வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகைத் தொகை ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒரு தடவை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2024 சனவரி 01 ஆம் திகதி முதல் திருத்த வேண்டியிருந்த வாடகைப் பணம் 2024 யூன் 06 ஆந் திகதியே திருத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த கடைக்கு ரூபா 15,000 வீதம் 154 கடைகளுக்காக 05 மாதங்களுக்கு ரூபா 11,550,000 வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீட்டு அறிக்கை குறித்துரைத்த திகதியில் வழங்காமையினால் இந்தப் பிரச்சனை ஏற்பட்டிருந்தது. 2024 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் மதிப்பீட்டு அறிக்கை பெற வேண்டியிருந்த போதிலும் அந்த அறிக்கை எங்களுக்கு தாமதமாக கிடைத்தமையால் மே 17 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்து நம்பிக்கைப் பொறுப்புக் கூட்டத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் யூன் 01 முதல் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.	குறித்துரைத்த திகதியில் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு உரிய மதிப்பீட்டு விடயங்கள் வழங்கப்படல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
128 கடைகளை உடைய சில்லறை கடைகள் கட்டிடத் தொகுதியின் 64 கடைகள் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 9,625,540 செலவில் மொத்த விற்பனைக் கடையாக மாற்றப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2025 யூன் 05 ஆந் திகதி வரையில் அந்த மாற்றப்பட்ட மொத்த விற்பனைக் கடைகள் 08 மற்றும் சில்லறை விற்பனைக் கடைகள் 03 இல் விற்பனை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	தற்போது 11 கடைகளை மாத்திரமே எஞ்சியுள்ளதுடன் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் அடுத்து வரும் கூட்டத்தின் போது அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் அந்தக் கடைகளுக்கு கேள்வி கோரி வாடகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	செயற்பாடற்ற கடைகளை விற்பனை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.